**Starting time 12.57 P.M.**

# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No. 221/2015**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. S. Sathya, Bench Clerk of this court, on 16.08.2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : எனக்கு தற்போது வயது என்னவென்றால் 49 ஆகும். எனது அப்பா தங்கவேல் உயிரோடு உள்ளாரா என்றால் 28.06.2014 அன்று காலமாகி விட்டார். எனது தகப்பனாருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் நான் மட்டும் தான் வாரிசு ஆவேன். எனது தகப்பனார் 28.06.2014 அன்ற காலமானார் என்றும், அவரின் ஒரே வாரிசு நான் தான் என்றும் அந்த வகையில்நான் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாக தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதுபோல் நான் சொல்லவில்லை என்றும், எனது தகப்பனாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்கள் எதுவும் என் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்தில் உள்ள கட்டிடம் எந்த வருடத்தில் கட்டப்பட்டது என்றால் 1998 ஆண்டு கட்டப்பட்டது. அவ்வாறு 1998 ம் ஆண்டு கட்டிடம் கட்டியதற்காக ஊராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. தாவா 1 வது அயிட்ட சொத்தின் நீள அகலம், முழு

விஸ்தீரணம் என்னவென்றால் கிழமேல் 42 அடி, தென்வடல் 36 அடி, மொத்த விஸ்தீரணம் 94 சதுர மீட்டர் ஆகும். எனது தகப்பனாரின் பட்டா மற்றும் பத்திரத்தின் அடிப்படையில் எனது தகப்பனாருக்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் 94 சதுர மீட்டர், அதன் சதுர அடி 1012 அளவு மட்டும் தான் பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு 94 சதுர மீட்டரின் மொத்த சதுர அடியான 1012 சதுர அடி மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், நான் சொல்லும் கிழமேல் 42 அடி, தென்வடல் 36 அடியின் மொத்த விஸ்தீரணம் 1512 சதுரடி என்று வருகிறது என்றால், அந்த அளவு தான் எனது அனுபவத்தில் உள்ளது. அவ்வாறு கூடுதலான அளவு எனது அனுபவத்தில் உள்ளதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன், பத்திரமும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்களில் நான் சொல்லும் 1512 சதுரடி என்பது எந்த ஆவணத்தில் உள்ளது என்றால், சாட்சி ஆவணங்களை பார்த்துவிட்டு வா.சா.ஆ.1 ஆவணத்தில் அளவு அவ்வளவு விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன செக்குபந்தி சொல்லப்பட்டுள்ளது என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு ஜெகநாத ரெட்டியார் வீட்டிற்கு மேற்கு, ராமலிங்க உடையார் வீட்டிற்கு தெற்கு, உங்கள் வகையறா வீட்டிற்கு கிழக்கு, தம்மம்பட்டி தெடாவூர் மெயின் ரோட்டிற்கு வடக்கு என்று உள்ளதாக கூறுகிறார். மேற்படி செக்குபந்திக்குள் தான் தாவா 1வது அயிட்ட சொத்து உள்ளதா என்றால் ஆமாம். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிழமேல் முழம் 24x29 என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றும், தென்வடல் அளவு குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா 1வது அயிட்ட சொத்தின் தென்புறம் என்ன உள்ளது என்றால், தம்மம்பட்டி மெயின் ரோடு உள்ளது. தாவா 1வது அயிட்ட சொத்தின் தென்புறம் வேறு யாருடைய வீடும் இல்லையா என்றால் இல்லை. தாவா 1வது அயிட்ட சொத்தின் தென்புறம் மேற்கில் தாவா 2வது அயிட்ட சொத்தும், அதன் கிழக்கில் குப்புசாமி ரெட்டியார் வீடும் உள்ளது என்றால் சரியல்ல, தென்புறம் தம்மம்பட்டி மெயின் ரோடு தான் உள்ளது. வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்துக்களை நில அளவையருடன் அளந்த போது

அளித்த நீ.ம.சா.ஆ.3 புலவரைபடத்தில், சர்வே எண் 636/19 ன் தென்புறம், சந்தும், தாவா 2 வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியும் அமைந்துள்ளது என்றும், அந்த சந்திற்கும் தெற்கில் சர்வே எண்கள் 636/24, 25, 26, 27, 28 ஆகிய சொத்துக்களுக்கும், தாவா 2 வது அயிட்ட சொத்தும் தென்புறத்தில் தான் தம்மம்பட்டி மெயின் ரோடு உள்ளது என்றால், சாட்சி ஆவணங்களை பார்த்துவிட்டு சர்வே எண் 636/26 க்கு தெற்கில் தான் மெயின் ரோடு உள்ளதாக கூறுகிறார். சர்வே எண் 636/26 ன் வடப்புறம் யாருடைய சொத்து உள்ளது என்றால் 3 ம் பிரதிவாதி பொன்னம்மாளின் சொத்து உள்ளது. அதன் சர்வே எண் 636/25 என்றால் சரிதான். சர்வே எண் 636/25 ன் வடபுறம் உள்ள 636/24 சொத்து யாருடையது என்றால் குப்புசாமி என்பவரின் சொத்து ஆகும். சர்வே எண் 636/24 க்கு வடப்புறம் கிழமேல்நீளமாக ஒரு சந்து உள்ளதாக நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் உள்ளது என்றால் அதுபோல் சந்தே எதுவும் இல்லை. அதுபோல் ஒரு சந்து உள்ளது என்றும், அந்த சந்தின் வடபுறம் தான் தாவா 1 வது அயிட்டசொத்து உள்ளது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்யவேண்டி நான் இவ்வழக்கில் மனு செய்தேன் என்றால் சரிதான். அதன்படி வழக்கறிஞர் ஆணையர், நில அளவையருடன் ஆய்வு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வகையில் நில அளவையரின் வரைபடமான நீ.ம.சா.ஆ.3 உண்மையான ஆவணம் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரி என்று சொல்லுகிறார். நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில், தாவா 1 வது அயிட்ட சொத்தின் தென்புறமும், 2 வது அயிட்ட சொத்தின் வடகிழக்கிலும் உள்ள சந்து வழியாக சென்று தென்வடலாக செல்லும் சாவடி தெருவை சென்று அடைய முடியும் என்றால் சரியல்ல, அதுபோல் சந்தே இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.அ.1 ஆவணத்திலஉள்ள அளவுகள் மற்றும் செக்குபந்தி தவறானது என்றும், அதன் அடிப்படையில் நான் இவ்வழக்கில் பரிகாரம் எதுவும் கேட்க இயலாது என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எனது முப்பட்டனார் சுப்பராயஉடையார் மற்றும் அவரது மகன் கிருஷ்ணசாமி உடையார், எனது தகப்பனார் தங்கவேல் அனுபவித்து வந்ததாக கூறுவது தவறு என்று சொன்னால்

சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எனது முப்பட்டனார் சுப்பராய உடையார், கிருஷ்ணசாமி உடையார், எனது தகப்பனளார் தங்கவேல் ஆகியோர்கள் அனுபவித்து வந்ததற்கு வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.2 பட்டாவானது எனது தகப்பனார் பெயரில் அரசால் ஒப்படைவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டாவில் தாவா 1 வது அயிட்ட சொத்தான சர்வே எண் 639/19 ல் 0.0094.0 என்று விஸ்தீரணம் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டாவில் நான்கு எல்லைகள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மெயின் ரோட்டிற்கு வடக்கு, கோபால், ராஜேந்திரன் வீட்டிற்கு கிழக்கு, ராமலிங்க உடையார் வீட்டிற்கும் தெற்கு, ஜெகநாத ரெட்டியார் வீட்டிற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் மெயின் ரோட்டிற்கு வடக்கு என்பதும், ராஜேந்திரன் வீட்டிற்கு கிழக்கு என்பதும் தவறான செக்குபந்திகள் என்றால் சரியல்ல, அது சரியான செக்குபந்தி ஆகும். நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் தாவா 1 வது அயிட்டசொத்தின் மேற்குபுறத்தில் கோபால் என்பவருக்கு பாத்தியப்பட்ட வீடு மட்டும் தான்உள்ளது என்றும் ராஜேந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்ட வீடு இல்லை என்றால் சரிதான். எனவே தவறான செக்குபந்தியை குறிப்பிட்டு நான் இவ்வழக்கில் பரிகாரம் கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எங்களுக்கு 1512 சதுரடி பாத்தியப்பட்டது என்று சொல்லும் நிலையில் வா.சா.ஆ.2 பட்டாவில் 1512 சதுரடிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா 1 வது அயிட்டசொத்தின் எவ்வளவு விஸ்தீரணத்தில் வீடுகட்டியுள்ளேன் என்றும், எவ்வளவு விஸ்தீரணம் காலி இடமாக உள்ளது என்றும் தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா 2 வது அயிட்ட சொத்து வருவாய் துறை ஆவணங்களில் என்னவென்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் நத்தம் காலி இடம் என்று உள்ளது. எனவே அதுஅரசுக்கு சொந்தமான சொத்துஎன்றால் அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை, வருவாய் துறை ஆவணங்களில் நத்தம் காலி இடம் என்பது அரசிற்கு சொந்தமான

சொத்து என்றும்,அது அரசிற்கு சொந்தமானது அல்ல என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்து எங்களுக்கு சொந்தமானது என்று சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்களே போதுமானது ஆகும். தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே அதை பொறுத்தும் பரிகாரம் எதுவும் கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டாவில் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களுக்கு வழங்கப்பட்டதா என்றால் ஆமாம். அந்த விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா2 வது அயிட்ட சொத்தின் வடப்புறம் யாருடைய சொத்து உள்ளது என்றால் எனது வீடு உள்ளது. மேற்கில் யாருடைய வீடு உள்ளது என்றால் 1,2 பிரதிவாதிகள் வீடு உள்ளது. கிழக்கில் யாருடைய வீடு உள்ளது என்றால் ஜெகநாத ரெட்டியார், குப்புசாமி ரெட்டியார், 3 ம் பிரதிவாதி பொன்னம்மாள், அப்பாவு ஆகியோர்களின் வீடு உள்ளது. தாவா 2 வது அயிட்ட சொத்தின் தென்புறம் என்ன உள்ளது என்றால் தம்மம்பட்டி மெயின் ரோடு உள்ளது. குப்புசாமி ரெட்டியார் மற்றும் ஜெகநாத ரெட்டியார் வீடுகளுக்கு மேற்கில் வாசற்படி உள்ளது என்றும் அதற்கு தாவா 2 வது அயிட்ட சொத்திலிருந்து சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. 3 ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கு மேற்குபுறத்தில் வாசற்படி உள்ளது என்றும் அவரும் தாவா 2 வது அயிட்ட சொத்தைதான் பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தின் மேற்கு புறம் 1 ம் பிரதிவாதி ராஜேந்திரனின் வீடு மற்றும் காலி இடம் உள்ளது என்றால் சரிதான். வீடு மெயின் ரோட்டை ஒட்டியும் காலி இடம் வீட்டின் வடபுறம் உள்ளது என்றால் சரிதான். அந்த காலி இடத்திற்கு செல்வதற்கு 1 ம் பிரதிவாதி, தாவா 2 வது அயிட்ட சொத்தை பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல, அவருக்கு தனி தடம் உள்ளது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 02.18 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**